ISSN:2582-9599



# மும்மணிகளும் மும்மூடங்களும்

**முனைவர் நீலகேசி.ஜெ.**
**சமணவியல் துறை சென்னைப் பல்கலைக் கழகம்**
**ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600028.**

**36**

**ஆய்வின் நோக்கம்:**

சமண சமயத்தின் வீடுபேற்றிற்கு இன்றியமையாத முக்கிய கூறுகளான மும்மணிகளைப் பற்றியும், மக்களிடையே பரவி இருக்கும் மும்மூடங்களைப் பற்றியும் தெளிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்:**

தமிழ்ச் சமண இலக்கியங்கள் மும்மணிகளையும் மும்மூடங்களையும் சுட்டி, எடுத்துக் காட்டி விளக்கி, கடவுள் பெயரால் நடைபெறுகின்ற உயிர்ப்பலிகளைத் தடுத்து, வெற்று சடங்குகளைத் தவிர்த்து, மக்களை இம்மூடபழக்க பழக்கங்களிலிருந்து மீட்டு நன்னெறிப் பாதையில் பயணிக்க வழிகாட்டுகின்றன. அத்தகைய பாடல்களைத் தொகுத்து அளிப்பதே இவ்வாய்வின் சாரமாகும்.

**சமணத்தின் மும்மணிகளாவன:**

1. நற்காட்சி
2. நன்ஞானம்
3. நல்லொழுக்கம்

**“ஸம்யக்தர்ஷன ஞான சாரித்ராணி மோக்ஷ மார்க:”**

**-1 , முதல் அத்யாயம், தத்துவார்த்த சூத்திரம்**

வடமொழியில் மும்மணிகளை **'ரத்ன த்ரயம்'** என வழங்குவர். தமிழ்ச் சமணர் மும்மணிகளைக் குறிக்கும் விதமாக **‘முப்புரி நூல்’** என வழங்கப்பெறும் பூணூலை அணிகிறார்கள். மும்மணிகளைப் பற்றி தமிழ்ச் சமண இலக்கியங்கள் எடுத்து உரைப்பதாவன:

**“நற்காட்சி நன்ஞானம் நல்லொழுக்கம் இம்மூன்றும்**
**தொக்க அறச்சொல் பொருள்”**

**-2 அருங்கலச் செப்பு**

**“மெய்வகை தெரிதல் ஞானம் விளங்கிய பொருள்கள் தம்மைப்**
**பொய்வகை இன்றித் தேறல் காட்சி ஐம் பொறியும் வாட்டி**
**உய்வகை உயிரைத் தேயாது ஒழுகுதல் ஒழுக்கம் மூன்றும்**
**இவ்வகை நிறைந்த போழ்தே இருவினை கழியும் என்றான்”**

**-1436, கேமசரியார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

**“உள்பொருள் இது என உணர்தல் ஞானம் ஆம்**

**தெள்ளிதின் அப் பொருள் தெளிதல் காட்சி ஆம்**
**விள்அற இருமையும் விளங்கத் தன் உளே**
**ஒள்ளிதின் தரித்தலை ஒழுக்கம் என்பவே”**

**-2845,** முத்தி இலம்பகம், சீவக சிந்தாமணி

**கூடிய மும்மையும் சுடர்ந்த கொந்து அழல்**
**நீடிய வினை மரம் நிரைத்துச் சுட்டிட**
**வீடு எனப்படும் வினை விடுதல் பெற்றது அங்கு**
**ஆடு எழில் தோளினாய் அனந்த நான்மையே**

**-2846,** முத்தி இலம்பகம், சீவக சிந்தாமணி

**“உறுதியைப் பெரிதும் ஆக்கி உலகினுக்கு இறைமை நல்கிப்**
**பிறவிசெற் றரிய வீட்டின் பெருமையைத் தருதலானும்**
**அறிவினில் தெளிந்த மாட்சி அரதனத் திரயம் என்னும்**
**பெறுதலுக்கு அரிய செல்வம் பெற்றனம் பெரிதும் என்றார்”**

**-51, யசோதர காவியம்**

**“மெய்ப்பொருள் தெரிதல் மாற்றப் பொருள்மிசை விரிந்த ஞானம்**
**அப்பொருள் வழாத நூலின் அருந்தகை ஒழுக்கம் தாங்கல்**
**இப்பொருள் இவைகள் கண்டாய் இறைவனால் விரிக்கப் பட்ட**
**கைப்பொருள் ஆகக்கொண்டு கடைபிடி கண்பொன் தேராய்”**

**-201, இரதநூபுரச் சருக்கம், சூளாமணி**

**“பேர்தற்கு அரும்பிணி தாம் இவை அப்பிணி**
**தீர்தற்கு உரியதிரி யோக மருந்துஇவை**
**ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவைஉண்டார்**
**பேர்த்து பிணிஉள் பிறவார் பெரிது இன்பம்உற்றே”**

**- 116, தரும உரைச் சருக்கம், நீலகேசி**

நீலகேசி மும்மணிகளை முக்கூட்டு மருந்து என சிறப்பிக்கின்றது. அகற்றுவதற்கு அரிய பிறப்புத் துன்பங்களை நீக்க ஓர்தல், தெளிதல், ஒழுகுதல், ஆகிய மூன்றையும் சேர்த்து திரியோக மருந்தாக உண்டவர் பிறவிப் பிணியில் சிக்காது உயர்ந்த இன்பம் அடைவர்.

**சமணத்தின் ஒன்பது தத்துவங்களாவன:**

1. உயிர்
2. உயிரல்லன
3. நல்வினை
4. தீவினை
5. வினை ஊற்று
6. வினை செறிப்பு

7. வினைக்கட்டு
8. வினை உதிர்ப்பு
9. வீடுபேறு

உயிர் முதலான ஒன்பது உறுதி பொருட்களின் இயல்பினை உள்ளவாறு உணர்தல் நன்ஞானமாகும்; அவ்வாறு உணர்வதில் உறுதியான நம்பிக்கை கொள்ளுதல் நற்காட்சியாகும்; நன்ஞானம் நற்காட்சிக்கு ஏற்றத்தான ஒழுக்கத்தை ஓம்புதல் நல்லொழுக்கமாகும்.

**நற்காட்சி:**

இறைவன், குரு, ஆகமங்கள் தத்துவங்கள் பற்றிய மயக்கில்லாத நம்பிக்கை கொண்டு மெய்ப்பொருளை அதன் இயல்பில் உள்ளபடி தெளிதல் நற்காட்சியாகும்.

**“மெய்ப்பொருள் தேறுதல் நற்காட்சி என்று உரைப்பர்**
**எப்பொருளும் கண்டு உணர்ந்தார்”**

**-3, அருங்கலச் செப்பு**

**“காட்சி வகைதான் கடவுள் முதல் ஆய**
**மாட்சி அமைந்த பொருள் எட்டும் மனத்துவைத்து**
**மீட்சி இலதாய் விரிந்து உந்திய இன்ப வெள்ள**
**வேட்கை அதுவாம் தெளிவு என்றனர் வென்றவர்”**

**-121, தரும உரைச் சருக்கம், நீலகேசி**

கடவுள், ஆகமம், பதார்த்தம், பிரமாணம், பிரவர்த்தி, லிங்கம், சரித்திரம், பலம், ஆகிய எட்டிலும் தெளிவு பெற்று நம்பிக்கை வைத்தலே நற்காட்சி எனப்படும்.

**நன்ஞானம்:**

தத்துவங்கள் பற்றிய மயக்கில்லாத அறிவு நன்ஞானமாகும்.

**“பொருள் நின்ற பெற்றியைப் பொய்இன்றி உணர்தல்**
**மருள்அறு நன் ஞான மாண்பு”**

**-57, அருங்கலச் செப்பு**

**“மான்ஒத்த நோக்கிமருந்து என்றுஅவை மூன்றின் உள்ளும்**
**ஞானத்தின் நன்மைநனி கேட்குவை ஆயினக்கால்**
**ஊனத்தை இன்றி உயிர் ஆதிய உள்பொருள்கள்**
**தானற்கு உணர்தல் இதுவாம் அதன் தத்துவமே”**

**-117, தரும உரைச் சருக்கம், நீலகேசி**

**நல்லொழுக்கம்:**

விரதங்களோடு கூடிய நல்லொழுக்கம்

| **எண்** | **இல்லறம் - அணுவிரதம்** | **துறவறம் – மஹாவிரதம்** |
|---|---|---|
| 1. | கொல்லாமை<br>(இருபுலன்கள் கொண்ட இயங்குயிர்கள் முதல்) | கொல்லாமை<br>(அனைத்து உயிர்கள்) |

| | | |
|---|---|---|
| 2. | பொய்யாமை | பொய்யாமை |
| 3. | களவாமை | களவாமை |
| 4. | பிறன்மனை நயவாமை | காமமின்மை |
| 5. | மிகுபொருள் விரும்பாமை | பற்றின்மை |

மேலும் நற்காட்சி என்பது மும்மூடங்களும், எண்வித செருக்குகளும், அறுவித அவிநயங்களும் இன்றி விளங்குவதாகும்.

**"மூவகை மூடமும் எட்டு மயங்களும்**
**தோவகை இல் காட்சியார்க்கு இல்"**
**- 29, அருங்கலச் செப்பு**

**"முந்து உற்ற மூடப்புலி மூன்றும் பிழைத்த பின்னை**
**அன்பு அச்சம் ஆசை உலகோடு இலிங்கு ஆத்தர் ஒப்பும்**
**என்பெற்றும் ஏத்தல் இலராய் எண் மயத்து நீங்கல்**
**இன்புற்ற காட்சி உடையார்க்கு இயல்பு ஆகும் அன்றே"**
**-122, தர்ம உரைச் சருக்கம் நீலகேசி**

**மும்மூடங்கள்:**

1. உலக மூடம்
2. தேவ மூடம்
3. பாசண்டி மூடம்

**உலக மூடம்:**

மலையிலிருந்து குதித்தல், தீக்குளித்தல், நதியில் மூழ்கியெழுதல், உயிர்ப்பலி கொடுத்தல், போன்றவையே உலக மூடமாகும்.

**"வரைப்பாய்தல் தீப்புகுதல் ஆறு ஆடல் இன்ன**
**உரைப்பின் உலக மயக்கு"**
**-30, அருங்கலச் செப்பு**

**"ஆப காஸா கரஸ்நான மூச்சய: ஸிகதாஸ்மநாம் I**
**கிரிபாதோ (அ)க்நி பாதாஸ்சா லோக மூடம் நிகத்யதே II"**
**-22, ரத்ன கரண்டக சிராவகாசாரம்**

**"மாமாங்கம் ஆடல் மணல் குவித்தல் கல்இடுதல்**
**தாம்ஓங்கு உயர்வரை மேல் சாவீழ்தல் - காமம் கொண்டு**
**ஆடோடு எருமை அறுத்தல் இவை உலக**
**மூடம் என உணரல் பாற்று"**
**-15, அறநெறிச்சாரம்**

புண்ணிய நதிகளில் குளித்தால் பாவங்கள் விலகும் என்பது உண்மையானால் அந்நதிகளிலுள்ள மீன்களும், மற்ற நீர்வாழ் விலங்குகளும், அதற்கான எந்த

முயற்சிகளிலும் ஈடுபடாமலேயே எளிதில் நற்கதி அடைந்து விடுமே!

சிலப்பதிகாரத்தில் கனாத் திறம் உரைத்த காதையில், கண்ணகியின் தோழியான தேவந்தி கண்ணகியிடம் அவளது துன்பம் தீர சோமகுண்டம், சூரிய குண்டம், ஆகிய நீர்த்துறைகளில் மூழ்கி எழுவதால் கணவனின் பிரிவுத் துன்பம் நீங்கி இன்பம் பெற இயலும் என்றதற்கு கண்ணகி **'பீடு அன்று'** எனக் கூறி மறுத்தாள்.

**"சோம குண்டம் சூரிய குண்டம் துறை மூழ்கிக்**
**காமவேள் கோட்டம் தொழுதார் கணவரொடு**
**தாம் இன்புறுவர் உலகத்துத் தையலார்**
**போகம் செய் பூமியினும் போய்ப் பிறப்பர் யாம் ஒரு நாள்**
**ஆடுதும் என்ற அணிஇழைக்கு அவ்ஆய்யிழையாள்**
**பீடுஅன்று என இருந்த பின்னரே நீடிய**
**காவலன் போலும் கடைதலையான் வந்துநம்"**

**-59-65 வரிகள், கனாத் திறம் உரைத்த காதை, சிலப்பதிகாரம்**

கோவலன் கண்ணகி கவுந்தி அடிகள் ஆகிய மூவரும் உறையூரிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வழியில் உள்ள ஒரு சோலையில் தங்கிய போது மாங்காட்டு மறையவன் செல்ல வேண்டிய வழித்தடம் பற்றியும், புண்ணிய சரவணம், பவ காரணி, இட்ட சித்தி ஆகிய பொய்கைகளில் குளித்தால் கிடைக்கும் பயன்கள் பற்றியும், தெரிவித்தான். அவ்வாறு அப்பொய்கைகளில் குளித்தால் நன்மைகளைப் பெறலாம் என்பது உலக மூடம் எனச் சமணர் கருதுவதால் அறநெறியின் ஒழுகி மன்னுயிர்களைக் காக்கும் அருட்செயல்களினாலேயே பயன் பெறலாம் எனக் கூறி கவுந்தியடிகள் அவனை மறுத்துரைத்தார்.

**"..............................................ஆங்கு,**
**விண்ணோர் ஏத்தும் வியத்தகு மரபின்**
**புண்ணியசரவணம், பவகாரணியோடு,**
**இட்டசித்தி, எனும் பெயர் போகி,**
**விட்டு நீங்கா விளங்கிய பொய்கை**
**முட்டாச் சிறப்பின் மூன்று உள: ஆங்கு,**
**புண்ணியசரவணம் பொருந்துவிர் ஆயின்,**
**விண்ணவர் கோமான் விழு நூல் எய்துவிர்;**
**பவகாரணி படிந்து ஆடுவிர் ஆயின்**
**பவ காரணத்தின் பழம் பிறப்பு எய்துவிர்;**
**இட்டசித்தி எய்துவிர் ஆயின்**
**இட்டசித்தி எய்துவிர் நீரே"**

**- 92 - 103 வரிகள், காடுகாண் காதை, மதுரைக் காண்டம், சிலப்பதிகாரம்**

**"காவுந்தி ஐயை ஓர் கட்டுரை சொல்லும்:**

**‘நலம் புரி கொள்கை நான்மறையாளா!**
**பிலம் புக வேண்டும் பெற்றி ஈங்கு இல்லை;**
**கப்பத்து இந்திரன் காட்டிய நூலின்**
**மெய்ப்பாட்டு இயற்கையின் விளங்கக் காணாய்;**
**இறந்த பிறப்பின் எய்திய எல்லாம்**
**பிறந்த பிறப்பில் காணாயோ, நீ?**
**வாய்மையின் வழாது மன் உயிர் ஓம்புநர்க்கு**
**யாவதும் உண்டோ, எய்தா அரும் பொருள்?”**

**-151 - 159 வரிகள், காடுகாண் காதை, மதுரைக் காண்டம், சிலப்பதிகாரம்**

**“ஏறு யானை இருங்கலைகள் நேர்ந்தார் அவைஇவை என்று**
**ஊறுஅங்கி உருஉரு செய்தாலும் உவந்து ஒழிபவான்**
**மாறுகொள் இலைமண்ணான் மறிஉரு செய்து ஈந்தக்கால்**
**பாறினீர்க்கும் அவர்க்கும் பழிபாவம் ஒன்றுஇல்லையே”**

**-38, தரும உரைச் சருக்கம், நீலகேசி**

தெய்வத்திற்குப் படையல் இடுவதற்காக விலங்குகளை பலி இடாமல் அத்தெய்வங்களின் வாஹனங்களாகக் கருதப் பெறும் யானை, கலைமான்கள், ஆகிய விலங்குகளின் உருவங்களைச் செய்து அளித்தாலும், அத்தெய்வங்கள் மகிழும்; ஆட்டின் உருவங்களை மண்ணால் செய்து கொடுத்தாலும், அவற்றைக் கொலை செய்யும் பாவங்கள் மக்களுக்கும், அத்தெய்வங்களுக்கும், சென்று சேராது.

தெய்வங்களுக்குப் படையல் இடுவது தேவையற்றது. மூவகை மூடங்களில் இதுவும் சேரும். நற்காட்சி உடையார் இத்தகைய செயல்களில் ஈடுபட மாட்டார் என்பது சமணக் கொள்கை. எனினும் மூட நம்பிக்கைகளில் ஆழ்ந்து உள்ள மக்களை மாற்றுவது அரிது என்ற காரணத்தாலும், உயிர்க் கொலைகளைத் தடுத்தே ஆக வேண்டும் என்ற காரணத்தாலும், முனிவர் இவ்வாறு கூறுவதாகக் கொள்ள வேண்டும்.

மேலும் இவ்வாறு உருவங்களைச் செய்து பலியிடுவதும் தவறு என்றும், அது எண்ணங்களின் மூலமான (bhaava himsa) பாவ இம்சையைக் குறிப்பதாலும், மாக்கோழியைப் பலியிடுவதால் ஏற்படும் தீவினைகளைப் பற்றி யசோதர காவியத்தில் விளக்கமாக விரித்து உரைக்கப் பெறுகிறது.

**“கண்கொடுத்தான் தடிகொடுத்தான் கயப்புலிக்குத் தற்கொடுத்தான்**
**பெண்கொடுத்தான் உடம்பினையும் பிளந்து இட்டுப் பிறர்க்கு ஈந்தான்**
**மண்கொடுத்தான் மகக்கொடுத்தான் மன்னும் தன் சேர்ந்தார்க்கு**
**விண்கொடுத்தான் அவன்கொடுத்த விரித்து உரைப்பன்கேள் என்றாள்”**

**-205 குண்டலகேசி வாதச் சருக்கம் நீலகேசி**

தன் கண்ணை அகழ்ந்தும், தன் உடலின் ஊனை அரிந்தும், பிறருக்கு அளித்தல், புலிக்கு தன் உடலையே உணவாக வழங்குதல், தன் மனைவியையும், மகனையும், வழங்குதல், தன் உடலைப்

பிளந்து கொடுத்தல், தன் நாட்டை அளித்தல், மட்டும் அல்லாமல் தன்னைச் சேர்ந்தார்க்கு மேலுலகம் அளித்தல் ஆகியச் செயல்கள் பேதைமையை உணர்த்துவதாக என நீலகேசியில் உரைக்கப் பெறுகிறது.

**"புண்ணினைத் தடிதலும் போழவாற்றி நிற்றலும்**
**கண்ணினைக் கழிக்கள்ளான் மிண்டிக்கொண்டு நீட்டலும்**
**விண்ணுயர் நெடுவரை வீற்று வீற்று வீழ்ந்தாலும்**
**அண்ணலார்தம் செய்கையும் ஆவது இல்லை அல்லதும் "**

**-352 , மொக்கல வாதச் சருக்கம், நீலகேசி**

நல்லறத்தார், புண் உண்டாகும்படி உடலை வெட்டிக் கொள்ளுதல், உடலை இரு கூறாகப் பிளத்தல், நாவினைப் பிடுங்கிக் கொண்டு சாதல், தூக்கிட்டுச் சாதல், மலை மீதிருந்து குதித்தல், ஆகியவற்றைச் செய்வதில்லை என நீலகேசி உரைத்தாள்.

**"தூக்கள்தம்மை ஆக்கலே தொல்லை நல்லறம் எனின்**
**நாக்களைப் பறித்தலும் நான்று வீழ்ந்து பொன்றலும்**
**தீக்குள் பாய்ந்துசாதலும் தீயசெங்கழுவின் மேல்**
**மேக்கினைக்கொண்டு ஏறலும்மேன்மை எண்ணலாம்பிற"**

**-353, மொக்கல வாதச் சருக்கம், நீலகேசி**

உடலில் ஊனம் உண்டாக்குவதே நல்லறம் எனின் நாவினைப் பிடுங்கிச் சாதல், தூக்கிட்டுச் சாதல், மலை மீதிருந்து குதித்தல், சிவந்த கழுமரத்தில் மீதேறிச் சாதல், நெருப்பில் வீழ்தல், ஆகிய செயல்களும் மேலான அறம் எனக் கூறலாமே என நீலகேசி அவற்றை மறுத்து உரைத்தாள்.

**தேவ மூடம்:**

தேவ, தேவியருக்கு அர்ச்சனை, பூசனை, யாகங்கள், ஆகியவற்றைச் செய்வதால் தம் விருப்பங்கள் நிறைவேறும் என அவற்றில் ஈடுபடுதல் தெய்வ மயக்கு எனப் பெறும்.

**"வாழ்விப்பர் தேவர் என மயங்கி வாழ்த்துதல்**
**பாழ்பட்ட தெய்வ மயக்கு"**

**-31, அருங்கலச் செப்பு**

**"மயக்கு ஆர்வம் செற்றம் உடையாரை ஏத்தல்**
**துயக்குஉடைத் தெய்வ மயக்கு"**

**-32, அருங்கலச் செப்பு**

**"வரோபலிப்ஸயா ஸாவாந் ராகத்வேஷ மலீமஸா: |**
**தேவதா யது பாஸீத தேவதா மூடமுச்யதே ||"**

**- 23, ரத்ன கரண்டக சிராவகாசாரம்**

**"ணயகோவி தேதிலட்டீண கோவி ஜீவஸ்ஸ குணதி உவயாரம் |**
**உவயாரம் அவயாரம் கம்மம்பி ஸுஹா ஸுஹம் குணதி ||"**

**-319, கார்த்திகேயானுபிரேக்ஷை**

**“பத்தீயே புஜ்ஜமாணோ விந்தர தேவோ வி தேதி ஜதி லச்சே l**

**தோ கிம் தம்மம் கீரதி ஏவம் சிந்தேஇ ஸத்திட்டீ ll”**

**- 320, கார்த்திகேயானுபிரேக்ஷை**

**பாசண்டி மூடம்:**

குற்றமுள்ள ஒழுக்கத்தை உடையவரையும், போலித் துறவியரையும், குருவென மதித்துச் சிறப்பு செய்தல் பாசண்டி மூடமாகும்.

**“மாசுண்ட மார்க்கத்து நின்றாரைப் பூசித்தல்**

**பாசண்டி மூடம் எனல்”**

**-33, அருங்கலச் செப்பு**

**“ஸக்ருந்தாரம்ப ஹிம்ஸாநாம் ஸம்ஸாரா வர்த்த வர்த்திநாம் l**

**பாகண்டி நாம் புரஸ்காரோ க்ஞேயம் பாகண்டி மோஹநம் ll”**

**- 24, ரத்ன கரண்டக சிராவகாசாரம்**

**“தோல்காவி சீரைத் துணி கீழ் விழ உடுத்தல்**

**கோல்காக்கரகம் குடை செருப்பு - வேலொடு**

**பல்என்பு தாங்குதல் பாசண்டி மூடமாய்**

**நல்லவரால் நாட்டப் படும்”**

**-63, அறநெறிச்சாரம்**

**வீடு வேண்டி விழுச்சடை நீட்டல் மெய்ம்**

**மூடு கூறையின் மூடுதல் வெண் தலை**

**ஓடு கோடல் உடுத்தல் என்று இன்னவை**

**பீடு இலாப் பிறவிக்கு வித்து என்பவே**

**-1427, கேமசரியார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

வீடுபேறு அடைவதற்காக சடை வளர்த்தல், காவி ஆடை அணிதல், மண்டை ஓட்டினைக் கைக்கொள்ளுதல், தனித்து இருத்தல், ஆகியவை சிறப்பற்ற பிறவிக்கு வித்தாக அமைவன என்று சீவகன் தாபதருக்கு உரைத்தான்.

**“தூங்கு உறிக் கிடந்து காயும் பழங்களும் துய்ப்ப நில்லா**

**பாங்கு அலா வினைகள் என்றார் பகவனார் எங்கட்கு என்னின்**

**ஓங்கு நீள் மரத்தில் தூங்கும் ஒண் சிறை ஒடுங்கல் வாவல்**

**பாங்கரில் பழங்கள் துய்ப்பப் பழவினை பரியும் அன்றே”**

**-1427, கேமசரியார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

தொங்கும் உறிகளில் இருந்து காயும் கனிகளும் உண்பதால் வினைகள் நீங்கும் என்பது உண்மையானால் உயர்ந்த மரங்களில் ஒடுங்கும் இயல்பைக் கொண்ட வௌவால்கள் அங்குள்ள பழங்களை உண்பதால் அவற்றின் பழ வினைகளும் நீங்குமா என சீவகன் வாதிட்டான்.

**“அல்லியும் புல்லும் உண்டு ஆங்கு ஆர் அழல் ஐந்துஉள் நின்று**

**சொல்லிய வகையின் நோற்பத் துணியும் வெவ் வினைகள் என்னி**

**கல்உண்டு கடிய வெம்பும் கான் உறை புறவம் எல்லாம்**

**புல்லிய வினையை வென்று புறக் கொடை காணும் அன்றே"**

**-1430, கேமசரியார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

அல்லிக் காயில் உள்ள அரிசியையும் புல்லரிசியையும் உண்டு ஐந்து தீக்களின் (பஞ்சாக்னி) நடுவில் நிற்கும் நெறியை நோற்பதால் தீவினைகள் தீரும் என்றால், கொடிய வெங்காட்டிலே கற்களை உண்டு வாழும் புறாக்களும் வினைகளை வென்று வெற்றி கொள்ளுமோ என சீவகன் வினவினான்.

**"நீட்டிய சடையம் ஆகி நீர் மூழ்கி நிலத்தில் சேர்ந்து**

**வாட்டிய உடம்பின் யாங்கள் வரகதி விளைத்தும் என்னில்**

**காட்டு இடைக் கரடி போகிக் கயம் மூழ்கிக் காட்டில் நின்று**

**வீட்டினை விளைக்க வேண்டும் வெளிற்றுரை விடுமின் என்றான்"**

**-1431, கேமசரியார் இலம்பகம், சீவக சிந்தாமணி**

நீண்ட சடை வளர்த்து நீரிலே குளித்து நிலத்தில் தாங்கி வாழ்ந்து வருத்திய உடலைப் பெற்றதாலேயே வீடுபேறு அடைதல் சாத்தியம் என்றால், காட்டில் கரடி குளத்தில் குளித்து வாழ்வதால் அது காட்டிலிருந்தபடியே வீடுபேறு அடைய வேண்டுமே.

இதனையே திருக்குறள் ஆசிரியர் தம் நூலில் பதிவிட்டு உள்ளார்.

**"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**

**பழித்தது அற்று விடின்"**

**- 280, திருக்குறள்**

உலகம் பழிக்கும் தீயச் செயல்களை விட்டு விட்டால், மொட்டை அடித்தலும், சடை வளர்த்தலுமாகிய புறக்கோலங்கள் தேவை இல்லை.

**"தன்னை ஈந்ததும் தாரங்கள் ஈந்ததும்**

**அன்ன தன் பொருள் கேட்டு அறம்கொண்டவன்**

**மன்னும் இல்அயன் மாந்தரைக் காணுமேல்**

**பின்னைச் செய்வன போலும் ஆகுமோ"**

**-243, அருக்க சந்திர வாதச் சருக்கம் நீலகேசி**

தன்னைப் பிறருக்கு ஈவதும், தம் மனைவியரை ஈவதும், ஆகிய செய்திகளை நூல் கூறுவதைக் கேட்டால் தம் இல்லத்திற்குள் தம் மனைவியை விரும்பி வரும் அயல் மாந்தரைக் காணும்போது சினம் கொள்ளாதவனின் செயல் போன்றதே ஆகும் என நீலகேசி உரைத்தாள்.

**"புத்தர்கண் பத்தியின் போதி மரம்தொழல்**

**புத்தர்கண் பத்தரையே தொழு புத்தர்கண்**

**பத்தியை யாக்கும் அதுவெனில் பற்றிய**

**பத்தாம் குடை செருப்பும் தொழு பாவீ"**

**-328, மொக்கல வாதச் சருக்கம், நீலகேசி**

புத்தர் மீது உள்ள பக்தியால் அவருக்கு நிழல் தந்த அரச மரத்தைத் தொழுதலைக் காட்டிலும் பௌத்தத் துறவியரை தொழலாம்; அம்மரம் புத்தருக்கு நிழல் தந்து உதவிற்று எனின் புத்தரின் துறவிற்கு உதவும் பிச்சைப் பாத்திரமான மண்டை, குடை, செருப்பு ஆகியவற்றையும் தொழ வேண்டும் அல்லவா என்பது நீலகேசியின் வாதமாகும்.

**முடிவுரை:**

கண்ணனின் பக்தையான மீரா பாடுவதாக அமைந்த கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை இயற்றிய பாடலும் மேற்குறிப்பிட்ட சிந்தனைகளைப் எதிரொலிப்பதாகவே உள்ளது.

**"நித்தம் நித்தம் நீராடில்**
**நெடுமால் அருளைப் பெறலாமேல்,**
**தத்தும் தவளை மீன்களும்அத்**
**தனிப்பேறடைய வேண்டாவோ?**

**காயும் கனியும் அருந்துவதால்**
**கண்ணன் கழலைப் பெறலாமேல்,**
**ஆயும் கிளைவாழ் குரங்குகளும்**
**அப்பேறடைய வேண்டாவோ?**

**வாடும் புல்லைத் தின்பதனால்**
**மாயன் கிருபை பெறலாமேல்,**
**ஆடும் மாடும் மான்களும்அவ்**
**அரும்பேறடைய வேண்டாவோ?**

**பெண்ணின் இன்பம் துறப்பதனால்**
**பெருமான் பாதம் பெறலாமேல்,**
**மண்ணில் எல்லா அலிகளும்அம்**
**மாபேறடைய வேண்டாவோ?**

**பாலை நிதமும் குடிப்பதனால்**
**பரமன் அடியைப் பெறலாமேல்,**
**ஞால மீது சிசுக்களும்அந்**
**நற்பேறடைய வேண்டாவோ?"**

ஆக, மக்கள் மத சடங்குகள் என்ற பெயரில் தம் மனதில் மூட நம்பிக்கைகளை விதைத்து வளர்த்து தம் இயல்பான பகுத்து அறியும் திறனைப் பாழடித்து ஆட்டு மந்தை போல

கண்மூடித்தனமாக வீண் வெற்றுச் செயல்களில் ஈடுபடுமாறு மூளைச் சலவைக்கு உள்ளாக்கப் பட்டனர். சமண சமயத்தில் தொன்று தொட்டு இப்போக்கினைக் கண்டித்து அச்செயல்களை விட்டொழிக்க அரும்பாடு பட்டு மும்மணிகள், மும்மூடங்கள், மூலம் அதற்கான செம்மையான பாதை வகுத்து கொடுக்கப் பெற்றது.

**திறவுச் சொற்கள்:**

1. சம்யக் ஞானம் – நன்ஞானம்
2. சம்யக் தர்சனம் - நற்காட்சி
3. சம்யக் சரித்திரம் - நல்லொழுக்கம்
4. பாஷண்டி மூடம் - பாக்கண்டி மூடம் (பாகதச் சொல்)
5. அனுபிரேசைஷ - ஆழ்சிந்தனை

**துணை நூலை பட்டியல் :**


1. சிலப்பதிகாரம் - இளங்கோ அடிகள்
2. சீவக சிந்தாமணி- திருத்தக்கதேவர்
3. சூளாமணி - தோலாமொழித் தேவ
4. யசோதரகாவியம் - வெண்ணாவலூர் உடையார் வேள்
5. நீலகேசி - ஆசிரியர் பெயர் அறியப்பெறவில்லை
6. அருங்கலச் செப்பு - ஆசிரியர் பெயர் அறியப்பெறவில்லை
7. ரத்னகரண்டக ஸ்ராவகாசாரம்- சமந்த பத்ர ஆச்சாரியர்
8. கார்த்திகேயானுபிரேசைஷ - கார்த்திகேய முனி
9. திருக்குறள் - திருவள்ளுவர்
10. அறநெறிச்சாரம் - முனைப்பாடியார்
11. கவிமணியின் கவிதைகள் - கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை